بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 7:5 ஸபர் 1432, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

## நான் படித்த அறிவிப்புப் பலகை (பாகம்-1)

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

கடந்த திங்கட்கிழமை 07.01.1432ஹி (13.12.2010)ம் தேதி அல் அந்தலுஸ் மாலிலுள்ள ஹைபர் பண்டாவுக்கு போன போது அந்தலுஸ் மாலின் மெயின் நுழைவாயினுள் நுழைந்ததும் அங்கு வைக்கப்பட்டிருந்த அறிவிப்புப் பலகையின் பக்கம் என் பார்வை பட்டது, அதன் பக்கம் நெருங்கி அதைப்பார்த்த போது, அது புகைத்தலைப் பற்றிய ஒரு எச்சரிக்கை பலகையாக இருந்ததால் அதைப்படிக்க முயன்றேன். அதை முழுக்க படித்து முடித்த போது அதை தமிழில் மொழிபெயர்த்து சுவனப்பாதைக்கு கொடுத்தால் வாசகர்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்பதால் அதை இங்கு தமிழில் தருகின்றேன். ஐரோப்பிய நாடுகளில் நாகரீகத்தில் முந்தியதாக? கணக்கிடப்படும் நாடுகள் உட்பட புகைத்தலை எதிர்த்து போரிடுவதை பார்த்ததே என்னை அதை படிப்பதற்கும் தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் தூண்டியதென்றால் மிகையாகாது. வாருங்கள் அந்த அறிவிப்பு பலகையை நாம் அனைவரும் படித்து பார்ப்போம்.

### 1. சவூதி அரேபியா

சவூதி அரேபியாவின் மன்னர் புகைத்தலை ஒழிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டதற்காக உலகளாவிய ஆரோக்கிய ஒன்றியத்தின் 2007ம் ஆண்டிற்கான பரிசை பெற்றார்.

### 2. ஐரோப்பிய ஒன்றியம்

ஐரோப்பிய ஒன்றியம் புகைத்தலுக்கு எதிரான ஒரு பாரிய விழிப்புணர்வு குழுவை (புகைத்தலில்லாத உலகத்தை உருவாக்க) என்ற தலைப்பில் ஏற்பாடு செய்திருந்தது. இதற்காக (72) மில்லியன் யூரோவை செலவு செய்திருக்கின்றது. (80) தொலைக்காட்சி அலைவரிசைகளில், (செனல்களில்) (72) மொழிகளில், (27) நாடுகளில் இதை ஒளிபரப்பு செய்து கொண்டிருக்கின்றது.

### 3. இத்தாலி 4. சுவிஸ் 5. ஜேர்மன் 6. நம்ஸா

இந்த நான்கு நாடுகளும், புகைத்தல் தடுக்கப்பட்ட இடங்களில் யாராவது புகைத்தால் 50 லிருந்து 250 யூரோ அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் என

*தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க ...*

## மார்க்கமா? மாதமா?

*- ஆசிரியர், சுவனப்பாதை மாதஇதழ்*

**நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் (அல்குர்ஆன் 9: 36)**

**ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு (முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும்; (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல்குர்ஆன் இறக்கியருளப் பெற்றது. (அல்குர்ஆன் 2: 185)**

**(போர் செய்வது விலக்கப்பட்டுள்ள ரஜப், துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய) புனித மாதத்திற்குப் புனித மாதமே ஈடாகும்;. இதே போன்று, எல்லாப் புனிதப் பொருட்களுக்கும் ஈடு உண்டு (அல்குர்ஆன் 2: 194)**

மேற்கண்ட மூன்று குர்ஆன் வசனங்களின் மூலம் அல்லாஹ் கூறுவது என்னவெனில், வானங்கள் மற்றும் பூமி படைத்த நாளிலிருந்தே அதாவது உலகம் படைக்கப்பட்ட நாள்முதல் வருடத்திற்கு 12 மாதங்கள் என்று குறிப்பிடுகிறான்.

12 மாதங்களில் ரமளான் மாதத்தை மட்டும் சிறப்பாக்கி கூறுவதற்குறிய காரணத்தையும் அல்லாஹ் குறிப்பிடுகின்றான் அதாவது, நல்லது கெட்டதை பிரித்து அறிவிக்கக்கூடிய செய்திகள் நிறைந்த இறைவேதமான அல்குர்ஆனை ரமளானில் இந்த மனித சமுதாயத்திற்காக இறக்கி வைத்து அதன் மூலம் நல்லவர்கள் கெட்டவர்களை இனம் காணுகின்றான்.

அடுத்ததாக நான்கு மாதங்கள் உள்ளன அவைகள் புனிதமிக்கது என்றும் அவைகளில் வரம்புமீற வேண்டாம் என்றும் அல்லாஹ் கட்டளையிடுகின்றான். இவ்வாறாக அல்லாஹ் கூறிய நான்கு புனித மாதங்களில் ஒன்றான துல்ஹஜ் மாதத்திற்கு கூடுதல் புனிதம் சேர்க்கும் விதமாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எடுத்தியம்பிய கீழ்கண்ட பொன்மொழி தெளிவாக்குகிறது. தன்னுடைய இறுதி ஹஜ்ஜின்பொழுது தன் தோழர்களுக்கு நிகழ்த்திய மிக முக்கிய உரையின் ஒரு பகுதியாகும்.

அபூபக்கர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

### உள்ளே!

வெளிநாட்டு வாழ்க்கை – 3
பெண்மணி அவள் கண்மணி – 6
இந்திய கடற்படையில் பணியாற்ற.. – 7
நான், எனக்காக - 9
கீப் சிட்டி கிளீன் – 11
இறை நினைவுகள் - 12
அறிவுப் போட்டி - 12

'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஓர் ஒட்டகத்தின் மீது அமர்ந்திருந்தார்கள், ஒருவர் அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருந்தார், அப்போது அவர்கள், 'இது எந்த நாள்?' என்று கேட்டார்கள், அந்த நாளுக்கு இன்னும் ஒரு பெயர் சூட்டுவார்களோ என்று கருதி நாங்கள் மௌனமாக இருந்தோம். 'இது நஹ்ருடைய (துல்ஹஜ் மாதம் பத்தாம்) நாள் அல்லவா?' என்றார்கள். அதற்கு 'ஆம்' என்றோம்.

அடுத்து இது 'எந்த மாதம்?' என்றார்கள், அந்த மாதத்திற்கு இன்னும் ஒரு பெயர் சூட்டுவார்களோ என்று கருதி நாங்கள் மௌனமாக இருந்தோம். 'இது துல்ஹஜ் மாதமல்லவா?' என்றார்கள், நாங்கள் 'ஆம்!' என்றோம். அடுத்து '(புனிதமான) இந்த ஊரில், இந்த மாதத்தில், இன்றைய தினம் எவ்வளவு புனிதமானதோ, அதுபோன்று, உங்களின் உயிர்களும், உடைமைகளும் புனிதம் வாய்ந்தவையாகும்' என்று கூறிவிட்டு 'இங்கே வருகை தந்திருப்பவர் வராதவருக்கு இச்செய்தியைக் கூறி விடவேண்டும்; ஏனெனில், வருகை தந்திருப்பவர் அவரை விட நன்கு புரிந்து கொள்ளும் ஒருவருக்கு அச்செய்தியை எடுத்துச் சொல்லி விடக்கூடும்' என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)

ஆக, அல்லாஹ்வும், வாழ்க்கை வழிகாட்டியாக அனுப்பப்பட்ட தூதர் முஹம்மது(ஸல்) அவர்களும் மாதங்கள் 12 என்றும் அவற்றில் ஒருசில மாதங்களின் சிறப்பையும், புனிததன்மையும் எடுத்துகூறி அவைகளை அடைந்தால் கூடுதல் நன்மைகள் புரிந்து மறுமை வாழ்க்கையை சிறப்பாக்கி கொள்ள இந்த வாழ்க்கையை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

60 நொடியின் சேர்க்கையை நிமிடமென்றும், 60 நிமிடத்தின் சேர்க்கையை மணி என்றும், 24 மணியானது ஒரு நாளென்றும், 29 அல்லது 30 நாட்களை கொண்டதை ஒரு மாதமென்றும் அவ்வாறே 12 மாதங்களின் சேர்க்கையை ஒரு வருடமென்றும் அனைவரும் விளங்கி வைத்துள்ளோம். ஆனால் இந்த ஒட்டுமொத்த கால அளவுகளில் ஏதாவது ஒரு நொடியையோ அல்லது ஒரு நாளையோ அல்லது ஒரு மாதத்தையோ அல்லாஹ்வோ, அவனின் தூதரோ எந்த ஒரு இடத்திலாவது கெட்டது, கழிவு செய்யப்படவேண்டியது என்று குறிப்பிடவில்லை மாறாக சிறப்பித்துதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மேலும், அல்லாஹ் கூறியதாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், காலத்தை ஏசுபவரை கண்டிக்கின்றார்கள் அதாவது

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்ககூடிய ஹதீதை இமாம் புகாரி(ரஹ்) அவர்கள் பதிவு செய்துள்ளார்கள், காலத்தைத் திட்டுவதின் மூலம் மனிதர்கள் என்னை சங்கடப்படுத்தி விடுகிறார்கள் காலத்திற்குச் சொந்தக்காரன் நானே! இரவையும் பகலையும் மாறிவரச் செய்பவனும் நானே என அல்லாஹ் கூறியதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நல்லது, கெட்டது எதுவென்று கொடுக்கப்பட்ட இந்த திருக்குர்ஆனில் அல்லாஹ் மார்க்கத்தை முழுமையாக்கிவிட்டான் என்றும் அதில் யாரும் மாற்றவோ, திருத்தவோ முடியாது என்றும் திட்டவட்டமாக குறிப்பிடுகின்றான்.

**உம்முடைய இறைவனின் வார்த்தை உண்மையாலும் நியாயத்தாலும் முழுமையாகிவிட்டது - அவனுடைய வார்த்தைகளை மாற்றுவோர் எவரும் இல்லை - அவன் (எல்லாவற்றையும்) கேட்பவனாகவும், (யாவற்றையும்) அறிபவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 6: 115)**

ஆனால், மேற்கண்ட குர்ஆன், ஹதீதிற்கு மாற்றமாக, முஹம்மது(ஸல்) அவர்கள் ஸஃபர் மாத தொடக்கத்தில் நோய்வாய்பட்டு மாதஇறுதி புதனன்று குணமானார்கள் அதனால் அந்த மாதமானது பீடையுடையது, ஒதுக்கவேண்டியது, கழிவு செய்யப்படவேண்டியது என்ற மூடபழக்கவழக்கம் பெரும்பாலான தமிழ் பேசக்கூடிய நாடுகளில் நிலவி அதனை அனுசரிக்கக்கூடிய நிலையையும் நாம் பார்த்தும் கேட்டும் வருகின்றோம்.

ஆதிகாலம் தொடங்கி இன்றுவரை ஏன் உலகம் அழியும்வரை, உலகில் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு சூழ்நிலையில் நோய்வாய்ப்படுவதென்பது அல்லாஹ் ஏற்படுத்திய நியதி அதற்கு தேவையான, முறையான வைத்தியம் செய்து அந்த நோயிலிருந்து மீளுவதும் எதார்த்தம். இந்த அடிப்படையில் முஹம்மது(ஸல்) அவர்களும் நோய்வாய்பட்டார்கள் பின்பு குணமானார்கள் என்பது அல்லாஹ்வின் ஏற்பாடு, அதற்காக அந்த நாளை அல்லது மாதத்தை தள்ளி வைப்பது என்பது மடமையின் உச்சக்கட்டமாகும்.

ஸஃபரில் சகுனமும் இல்லை எந்த பீடையும் இல்லை என்ற பொன்மொழியையும் நபிகள்(ஸல்) அவர்கள் கூறியதை இமாம் முஸ்லிம்(ரஹ்) அவர்கள் தன்னுடைய கிரந்தத்தில் பதிந்துள்ளார்கள், இஸ்லாத்தில் தொற்றுநோய் என்பதில்லை, துர்ச்சகுனம் பார்ப்பது கூடாது, ஆந்தை சாஸ்திரம் பார்ப்பதும் கூடாது, ஸஃபர் கிடையாது, நட்சத்திர சகுனம் பார்ப்பதும் கிடையாது, கொள்ளிவாய்ப் பிசாசுமில்லை என தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்படி தெள்ளத்தெளிவாக கொடுக்கப்பட்ட குர்ஆனையும் அதனை தன் வாழ்நாளில் வாழ்ந்து காட்டி சென்ற நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஒவ்வொரு அசைவுகளையும் பதிந்து பத்திரபடுத்தி வைத்துள்ள இந்த சத்திய மார்க்கத்தில் இருந்துக்கொண்டு யாரோ கூறினார்கள் என்றும், யாரோ செய்தார்கள் என்றும், எங்களின் முன்னோர்கள் செய்ய கண்டுள்ளோம் என்றும், இதுதான் எங்ளூரின் நடைமுறை என்றும், இதனை செய்து நாங்கள் ஈடேற்றம்(?) அடைய போகிறோம் என்று செய்யக்கூடிய அனாச்சாரங்களை அல்லாஹ் அடியோடு அழித்து ஒழித்து விடுவானாக! ஆமின்.

அப்படி ஸஃபர் மாதத்தில் இவர்கள் வணக்கம் என்ற கண்ணோட்டத்தில் செய்யப்படுகின்ற நடைமுறைகளை அனைவரும் அறிந்ததுதான் என்றாலும் ஒரு ஞாபகமூட்டுவதற்காக ஒருசில விஷயங்களை தெரிந்துக் கொள்வோம்.

ஸஃபர் மாதம் பீடை என்று அந்த மாதம் முழுவதும் நல்ல காரியங்கள் செய்யாமல் பிற்படுத்ததுவது அல்லது முற்படுத்துவது (சுபகாரியங்களை தள்ளி வைக்கின்றோம் என்று கூறுகின்றார்களே தவிர, அவர்களின் குடும்பத்தில் நிகழக்கூடிய குழந்தை பிறப்பையோ அல்லது யாருடைய மரணத்தையோ அல்லது யாருக்காவது நோய் ஏற்படுவதை தடுக்க முடியுமா அல்லது தள்ளிதான் வைத்திருக்கின்றார்களா என்றால் ஒருகாலும் முடியவே முடியாது என்று அவர்களும் விளங்கித்தான் வைத்துள்ளனர், ஆனால் வரட்டு கௌரவத்தினால் அதில் தானும் நிலைத்து மற்றவர்களையும் நிர்பந்திக்கின்றனர்)

கடைசி புதனன்று வீடு வாசல்களை சுத்தம் செய்து பாத்திஹா ஓதி கறி சோறு சமைத்து உண்டு கழித்தால் பீடை நீங்கி விட்டது என்று நம்புவது

மா இலைகளிலும் தட்டுகளிலும் ஏதேதோ எழுதி அதனை தண்ணீரில் கரைத்துக் குடித்தால் பீடை நீங்கும் என்ற அறியாமையில் உழன்று கொண்டிருக்கின்றனர்.

பீடையை கழிக்க உணவு பதார்த்தங்களை சமைத்து எடுத்துக் கொண்டு வெளியிடங்களுக்கு சென்று உண்டு கழித்துவிட்டால் பீடை கழிந்துவிடும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது இந்த சமுதாயம்.

உண்மை எதுவென்று தெரிந்திருந்தும் இதுபோன்ற பித்அத்தான காரியங்களினால் ஈடுபடுவோர்கள், தாங்கள் பாரம்பரியமாக செய்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்தை கைவிட்டு நடுநிலையோடு சிந்தித்து இதன் மூலம் நாளை மறுமையில் நன்மை கிடைக்குமா அல்லது தண்டனை கிடைக்குமா என்று உணர்ந்து தானாக இதனை விட்டொழிக்க அல்லாஹ் அருள்புரிவானாக.

இன்டர்நெட் வசதியுள்ள அன்பான சுவனப்பாதை வாசகர்களுக்கு:

ஸஃபா மாத பீடையா என்ற செய்திகளை கூடுதலாக அறிந்து கொள்ள ஏற்கனவே சுவனப்பாதை மூலம் வெளிவந்த அது சம்மந்தமான கட்டுரைகளை பார்வையிடலாம்.

1. 1426 ஆம் ஆண்டு ஸஃபர் மாத இதழில், (இதழ் எண் 1:5-ல்) ஸஃபர் மாதம் பீடை மாதமா? என்ற தலைப்பின் கீழ்: மனிதர்கள் அறிந்து கணக்கிட்டு கொள்வதற்காக நாட்களையும், மாதங்களையும் அல்லாஹ் படைத்தான், அவற்றில் நல்ல நாட்கள் என்றோ கெட்ட நாட்கள் என்றோ கிடையாது. அல்லாஹ்வோ, நபி(ஸல்) அவர்களோ அப்படி குறிப்பிடாதபோது ஒரு குறிப்பிட்ட மாதத்தை மட்டும் எந்தவித ஆதாரமுமின்றி...

மேலும் படிக்க:
http://www.suvanam.com/1426/142602-01-05.pdf

2. 1427ஆம் ஆண்டு ஸஃபர் மாத இதழில், (இதழ் எண் 2:5-ல்) மாதத்திலுமா மாற்றாரின் கலாச்சாரம்! என்ற தலைப்பின் கீழ்: வல்ல அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம். இஸ்லாமல்லாத எந்த ஒரு மதமோ மார்க்கமோ அதனைப் பின்பற்றுவோருக்கு அல்லாஹ்விடம் திருப்பொருத்தத்தைப் பெற்றுத்தராது என்பதற்கு அருள்மறையில் ஆதாரங்கள் உள்ளன.

உத்தம திருநபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், எவர் பிறமத கலாச்சாரங்களைப் பின்பற்றுகிறாரோ அவர் அவர்களைச் சார்ந்தவரே. அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) அவர்கள், ஆதாரம்: அபூதாவூத், அஹ்மத்.

மேலும் படிக்க:
http://www.suvanam.com/1427/142702-02-05.pdf

3. 1429ஆம் ஆண்டு ஸஃபர் மாதஇதழில், (இதழ் எண் 4:5-ல்) எல்லா நாட்களும் நல்ல நாட்களே! என்ற தலைப்பின் கீழ்: அல்லாஹ் படைத்த எல்லா நாட்களும் நல்ல நாட்கள்தான், சில நாட்கள் நல்லதென்றும் சில நாட்கள் கெட்டதென்றும் கருதுவது கூடாது. இது இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் மிக பெரும் குற்றமும் மூட நம்பிக்கையுமாகும். ஒவ்வொரு நாளும் அது சிலருக்கு சந்தோஷமான நிகழ்வுகள் நடக்கக்கூடியதாகவும் சிலருக்கு கவலையான நிகழ்வுகள் நடக்கக்கூடியதாகவும் இருக்கும், அல்லது ஒருவருக்கு இரண்டு நிகழ்வுகளும் ஒரே நாளில் நடக்கவும் செய்யும்.

இதை வைத்து அந்த நாளை நல்ல நாள் என்றோ கெட்ட நாள் என்றோ கூறிவிட முடியாது. இவ்வுலகம் சோதனைக் கூடமாகும். மரணிக்கும் வரை ஒவ்வொரு மனிதனும் பல விதமான சோதனைகளைக் கொண்டு சோதிக்கப்பட்டுக் கொண்டே இருப்பான். சோதனைகள் வரும்போது அதை ஒரு முஸ்லிம் பொறுத்துக் கொள்ளவும் பொருந்திக் கொள்ளவும் வேண்டும். அது அவனுடைய பாவங்களுக்கு பரிகாரமாக அமைகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமும் நம்ப வேண்டும். இப்படி ஈமான் கொள்வது ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகும். மேலும் படிக்க:
http://www.suvanam.com/1429/142902-04-05.pdf

4. 1430ஆம் ஆண்டு ஸஃபர் மாதஇதழில், (இதழ் எண் 5:5-ல்) ஸஃபர் மாதமும், முஸ்லீம்களும் என்ற தலைப்பின் கீழ்: சத்திய மார்க்கமாகிய இஸ்லாத்தில், இஸ்லாமியர்களாக இருந்து கொண்டு மற்ற மதங்களில் காணப்படுகின்ற கலாச்சாரங்களை நம்முடைய முன்னோர்கள் அறியாமையினால் செய்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக நம்முடைய முஸ்லிம்களும் செய்யக்கூடிய ஒருசில காரியங்கள் பிறமத கலாச்சாரங்களை ஒத்து இருப்பது மட்டுமின்றி அதற்கு வணக்கம் என்ற முத்திரையையும் பதித்து செய்து வருவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் மாதம்தோறும் ஏதாவதொரு புதுமையை வணக்கம் என்ற பெயரில் நிறைவேற்றி அதன் காரணமாக நன்மையை அடைந்து விடலாம்? என்றெண்ணி செய்கின்றனர் உதாரணமாக முஹர்ரம் மாதம் பாஞ்சாவென்றும், ஸபர் மாதம் வந்தால் ஸபர் கழிவு அல்லது ஒடுக்கத்து புதனென்றும், ரபியுல்அவ்வல் மாதம் வந்துவிட்டால் மீலாது விழா கொண்டாட்டமென்றும், ரஜப் மாதத்தில் பூரியான், பாயாசம் சகிதம் பாத்திஹாவென்றும், ஷாஃபான் மாதத்தில் ஷபே பராஅத் இவைகள் போன்ற பித்அத்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றன. மேலும் படிக்க:
http://www.suvanam.com/1430/143002-05-05.pdf

# வெளிநாட்டு வாழ்க்கை சாதகமும் பாதகமும்

*- ரியாஸ் அஹமது*

**சுவனப்பாதை மாத இதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430) பதிமூன்றாம் ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை**

'திரை கடலோடியும் திரவியம் தேடு' இந்த வார்த்தைகளை உண்மையாக்கி வைத்தவர்கள் நமது சமுதாயத்தினர்தான் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. ஆரம்ப காலங்களில் மலேசியா, பர்மா என கிழக்காசிய நாடுகளுக்கு சென்று தங்களின் வருமானத்தை தேடிக்கொண்டனர். பின்னர் மத்திய கிழக்கு நாடுகள் என அறியப்படும் வளைகுடா நாடுகளுக்கு தங்களின் படையெடுப்பை தொடங்கினர். சில காலங்களுக்கு பின் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா என விரிந்து இன்று உலகின் பல பாகங்களிலும் நமது சமுதாயத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் என்னதான் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டாலும் வெளிநாடுகளுக்கு அதிலும் குறிப்பாக வளைகுடா நாடுகளுக்கு வேலை தேடி வருபவர்களின் எண்ணிக்கையில் பெரிய அளவில் மாற்றங்கள் இல்லை. தனது அண்டை வீட்டினர் வெளிநாட்டிற்கு சென்ற பின்னர் கட்டிய புது வீடு, அவர்களின் வாசம் நிறைந்த வாழ்க்கை (அதாங்க ஐந்து திர்ஹம் சென்ட்), ஆடம்பர தோரணை என அனைத்தையும் பார்த்த பிறகு மற்றவர்களும் வெளிநாட்டிற்கு படையெடுக்கின்றனர் பெரும்பான்மையான மக்கள் வீட்டின் பொருளாதார நிலை காரணமாகவும்

தங்களின் படிப்பு மற்றும் தகுதிக்கேற்ப வேலை வேண்டும் என்ற எண்ணத்திலும் தான் வெளிநாடு வருகின்றனர்.

வெளிநாட்டு வாழ்க்கையின் சாதகங்களையும் பாதகங்களையும் இக்கட்டுரையில் நாம் நோக்க இருக்கின்றோம். இதனை வாசிக்கும் வாசகர்கள் ஒரு விஷயத்தை மனதில் கொள்ள வேண்டும். நாம் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் அனைவருக்கும் ஒத்துப் போக வேண்டும் என்ற விதி ஏதும் கிடையாது. அதேபோல் சில விஷயங்கள் சில இடங்களுக்கு மட்டும் பொருந்தும்.

### வெளிநாட்டு வாழ்க்கையின் சாதகங்கள்:

வெளிநாடு வருபவர்களின் வாழ்க்கையை அலசிப்பார்க்கும் போது அதில் பாதகங்கள்தான் பூதாகரமாக தெரிந்தாலும் அதில் சாதகங்களும் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

#### 1. பொருளாதாரத்தில் ஏற்றம்:

வெளிநாட்டில் வாழ்பவர்களின் பொருளாதாரத்தில் பெரிய அளவில் முன்னேற்றம் இல்லை என்றாலும் கணிசமான முன்னேற்றம் இருக்கத்தான் செய்கின்றது. வெளிநாட்டிற்கு வந்த பிறகு குடும்ப கடன்களை அடைத்து வீட்டின் தேவைகளை நிறைவேற்றி தங்களின் பொருளாதாரத்தை உயர்த்தியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அமெரிக்கா, சிங்கப்பூர், ஐரோப்பிய பிரதேச நாடுகளில் வாழ்பவர்கள் பொருளாதாரத்தில் வசதியாக இருக்கிறார்கள் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. தன்னுடைய தேவைகள் போக கணிசமான ஒரு தொகையை சேமிக்கும் வாய்ப்பையும் இவர்கள் பெறுகின்றனர்.

#### 2. உதவி செய்தல்:

மருத்துவ உதவி, கல்வி உதவி, கடன் உதவி என பல உதவிகள் கோரி விண்ணப்பங்கள் தினந்தோறும் மின்னஞ்சல்கள் மூலம் நம்மை வந்து சேர்ந்து கொண்டே இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலான தேவைகள் வெளிநாட்டில் உள்ளவர்களால்தான் நிறைவேற்றப் படுகின்றன என்றால் அது மிகையல்ல.

ஊரில் இருக்கும் போது தனது பொருளாதாரத்தை மற்றவர்களுக்கு கொடுக்க யோசிப்பவர்கள் வெளிநாடுகள் வந்த பிறகு அதனை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. இவர்களின் இந்த உதவிகள் வட்டி போன்ற கொடுமையில் இருந்து பல குடும்பங்களை பாதுகாத்துள்ளது. இதுவல்லாமல் பல சமுதாயப் பணிகளுக்கும் இவர்கள் தங்களின் உதவிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர். எந்த உதவிகள் என்றாலும் வெளிநாட்டில் வேலை செய்பவர்களிடம் கேட்டால் கிடைக்கும் என்ற எண்ணம் இன்று பரவலாக உள்ளது.

#### 3. இஸ்லாமிய சூழல்:

(சில வளைகுடா நாடுகளுக்கு மட்டும் தான் இது பொருந்தும்) முழுமையாக இல்லாவிட்டாலும் குறைந்த அளவிலேனும் இஸ்லாமிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள, இந்த வாழ்க்கை நமக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது. குறைந்தபட்சம் கடமையான தொழுகைகளை உரிய நேரத்தில் மஸ்ஜித் சென்று தொழும் வாய்ப்பு கிடைக்கிறது.

உம்ரா கடமையை நிறைவேற்றும் பாக்கியமும், ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியமும் சவூதி அரேபியாவில் வேலை செய்பவர்களுக்கு எளிதாக கிடைக்கின்றன. ஊரில் இருந்தால் இவையெல்லாம் வெறும் கனவாகவே இருந்திருக்கும்.

நல்ல இஸ்லாமிய சொற்பொழிவுகளை கேட்கும் வாய்ப்பும் இஸ்லாமிய அறிவை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் இங்கு அதிகமாக கிடைக்கின்றன. குறிப்பாக பெண்களுக்கு ஊரில் இதைப் போன்ற வாய்ப்புகள் கிடைப்பது மிகவும் குறைவு.

#### 4. விரிவாகும் நட்பு வட்டம்:

உலகளாவிய அளவில் தங்களுடைய நட்பின் வட்டத்தை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பை வெளிநாட்டில் உள்ளவர்கள் எளிதாக பெற்றுக்கொள்கின்றனர். மற்ற நாட்டு மக்களின் கலாச்சாரம் மற்றும் அந்த நாட்டின் சூழல்கள் குறித்து அறிந்து கொள்வதற்கும் இது உதவுகிறது. தமிழை மட்டுமே அறிந்தவர்கள், எவ்வித வகுப்புகளுக்கும் செல்லாமல், பலமொழி விற்பன்னர்களாக மாறும் அதிசயம் இங்குதான் நடக்கிறது.

### வெளிநாட்டு வாழ்க்கையின் பாதகங்கள்:

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல் எந்த ஒரு விஷயத்திற்கும் சாதகமும் பாதகமும் இருக்கத்தான் செய்யும். இதற்கு வெளிநாட்டு வாழ்க்கையும் விதிவிலக்கல்ல. சாதகங்களை கண்ட நாம் இப்பொழுது பாதகங்களையும் சற்று அலசுவோம்.

#### 1. தொலைந்து போகும் குடும்ப வாழ்க்கை:

வெளிநாட்டு வாழ்க்கை என்றவுடன் வீட்டையும் ஊரையும் விட்டுப் பிரியும் சோகம்தான் அனைவரின் மனதிலும் தோன்றும். வெளிநாடுகளில் வாழும் பெரும்பான்மையினர் தனிமையில்தான் தங்கள் வாழ்க்கையை கழிக்கின்றனர்.

குடும்ப உறுப்பினர்களின் பாசம் தொலைபேசி மூலம்தான் கிட்டுகிறது. வருடத்திற்கு ஒரு மாதம் அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒரு மாதம் விடுமுறையில்தான் குடும்ப உறுப்பினர்களை சந்திக்க முடிகிறது. குடும்பத்தில் நிகழும் சந்தோஷமான செய்திகளை கேட்டு பூரிப்பதும் சோகமான நிகழ்வுகளை கேட்டு அழுவதும் தொலைபேசியில் மட்டுமே. குடும்ப நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பது பெரும்பாலும் எட்டாக் கனிதான். உடன் பிறந்தவர்கள் அனைவரும் ஒன்றாக சந்தித்துக் கொள்வது என்பது இன்று உலக அதிசயமாகத்தான் உள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழ்பவர்கள் நிலை இன்னும் மோசம். சாஃப்ட்வேர் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு வருடத்திற்கு பத்து நாட்கள் தான் விடுமுறையாம்! பயணத்தில் இரண்டு நாட்கள் சரியாகிவிடும். சில வருடங்களுக்கு பின் நமது குடும்பத்தைச் சார்ந்தவர்களை பிறர் நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

அதிலும் திருமணம் ஆனவர்களின் நிலையை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. ஆசை மனைவியை தவணை முறையில் சந்திக்கும் கொடுமையை எப்படி கூறுவது? இல்லறத்தில் ஈடுபட வேண்டிய நாட்கள் இங்கு பாலை வெயிலிலும் கடுங்குளிரிலும் கடந்து கொண்டிருக்கின்றன. என்னதான் சேலைகளையும் வாசனை திரவியங்களையும் அள்ளிக் கொண்டு சென்றாலும் உடன் வாழும் சுகத்தை இவை தருமா?

குழந்தைகளை பெற்ற பிறகு நிலை இன்னும் மோசமாகிறது. குழந்தைகளின் தளிர் நடை, மழலைப் பேச்சு, குறும்புகள் என அனைத்தும் செவிவழிச் செய்தியாகத்தான் நம்மை வந்தடைகின்றன. நாட்கள்

செல்லச் செல்ல நமது முகம் குழந்தையின் மனதிலிருந்து மெதுவாக மறைகின்றது. சம்பாதிப்பதற்குதான் வெளிநாடு வந்தோம், ஆனால் சம்பாத்தியத்தின் பெரும் பகுதி தொலைபேசி கட்டணமாகத்தான் செல்கிறது என பலபேர் இங்கு புலம்பிக் கொண்டிருக்கின்றனர்.

## 2. பெற்றோர்களின் நிலை:

மனைவி மற்றும் குழந்தைகளுடன் வெளிநாட்டில் இருப்பவர்களிடம் பெரும்பாலும் மற்றவர்கள் சொல்வது, 'உங்களுக்கென்ன கவலை, குடும்பத்தோட இருக்கீங்க?' இவர்களிடம் நாம் கேட்க விரும்புவது இதுதான், 'குடும்பம் என்றால் மனைவி மற்றும் குழந்தைகள் மட்டும்தானா? நமது பெற்றோர்களையும் உடன்பிறப்புகளையும் பின்னர் என்னவென்று சொல்வது?'

இங்கு மனைவி மற்றும் குழந்தைகளுடன் வெளிநாட்டில் வசிப்பவர்கள், தங்களது பெற்றோர்களை அவர்களின் முதுமை காலத்தில் தனிமையில்தான் விட்டு வந்துள்ளனர். பெற்றோர்களை கவனிக்காதது குறித்து மறுமையில் அல்லாஹ் நம்மை கேள்வி கேட்கும் போது என்ன பதில் சொல்லப் போகிறோம் என்ற கேள்வி நம்மை உறுத்திக் கொண்டுதான் இருக்கிறது. மாதம்தோறும் பணம் அனுப்புவதோடு நமது கடமை முடிந்துவிட்டதா என்ன?

## 3. சீரழியும் குடும்ப உறவுகள்:

குடும்பத்து ஆண்கள் வெளிநாடுகளில் இருக்கும் போது சொந்த ஊரில் தனிமையில் இருக்கும் பெண்கள் தவறான பாதைகளின் பக்கம் செல்வதற்கு அதிக அளவில் வாய்ப்புகள் உள்ளன. அதிர்ச்சிகரமான பல செய்திகளை நாம் நாள்தோறும் கேள்விப்பட்டு வருகிறோம். இவை தற்போது அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. தனிமையில் இருக்கும் பெண்களிடம் பெண்களை போகப்பொருளாக கருதுகின்றவர்களும், பிற கயவர்களும் தங்களின் சதி வலையை விரிக்கின்றனர். இதில் இப்பெண்கள் மிகவும் எளிதாக வீழ்ந்து விடுகின்றனர்.

வெளிநாட்டில் தனது கணவன் படும் கஷ்டங்கள் குறித்து சிறிதும் யோசிக்காமல் அவன் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருட்களுடன் வீட்டை விட்டு ஓடிவிடுகின்றனர். இல்லையென்றால் விஷயம் கணவனுக்கு தெரிய வரும் போது அது மணமுறிவுக்கு வழி வகுக்கிறது. கணவன் மனைவியிடையே ஏற்படும் பிரச்சினைகள் அவர்களின் குழந்தைகளையும் பாதிக்கின்றன.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் பெண்களும் இதற்கு பலியாகின்றனர். பெற்றோரையும் சுற்றத்தாரையும் உதறி விட்டுச் செல்லும் இப்பெண்கள் கயவர்களால் சீரழிக்கப்பட்டு தன்னுடைய எஞ்சிய வாழ்க்கையை ஒரு விபச்சாரியாகவோ அல்லது பைத்தியமாகவோ கழிக்கின்றனர். இவளால் அவமானத்திற்கு உள்ளான குடும்பத்தினர் நெஞ்சு பொறுக்காமல் மரணத்தை தழுவுகின்றனர். இதனை தடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மனைவி மற்றும் குழந்தைகளுடன் சேர்ந்து வாழ்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்;, இல்லையென்றால் மனைவியை குடும்பத்தினருடன் இணைந்து வாழ வழிவகைகளை செய்ய வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு செல்லும் பெண், மற்றும் ஆண் குழந்தைகளையும் உரிய முறையில் கண்காணித்து வளர்க்க வேண்டும்.

## 4. பொருளாதார நிலை:

சாதகங்களை நாம் அலசும் போது பொருளாதார நிலையை குறித்து நாம் குறிப்பிட்டிருந்தோம். சில நபர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும் பெரும்பான்மையானவர்களின் நிலையில் பெரிய அளவில் மாற்றங்கள் இல்லை. பல வருடங்கள் வெளிநாடுகளில் கழித்த போதிலும் எந்த நிலையில் ஊரில் இருந்து வந்தார்களோ அதே நிலையில் தான் தற்பொழுதும் உள்ளனர். மின்சாதன பொருட்களை வாங்கி குவித்ததை தவிர வேறு எந்த சாதனையும் பெரும்பான்மையினரிடம் கிடையாது.

## 5. மறைந்து போகும் இஸ்லாமிய வாழ்க்கை:

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழ்பவர்கள் இஸ்லாத்தை விட்டும் தூரமாகும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். மேற்கத்திய கலாச்சாரத்தின் காரணமாக தங்களுடைய குழந்தைகளை இஸ்லாமிய சூழலில் வளர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர். இதன் காரணமாகவே அமெரிக்கா போன்ற நாடுகளை விட்டு தாயகம் திரும்பிய மக்களை நாமறிவோம்.

இவ்வாறு நாம் கூறுவதால் வளைகுடா நாடுகளில் முழு இஸ்லாமிய வாழ்க்கையை நாம் வாழ்ந்து விட முடியும் என்று யாரும் விளங்கி விட வேண்டாம். மேற்கத்திய கலாச்சாரத்தின் கோரப்பிடியில் தற்போது பல வளைகுடா நாடுகளும் சிக்கித் தவிக்கின்றன. பள்ளிவாசல்கள் இல்லாத பகுதிகளும் வளைகுடா நாடுகளில் உண்டு என்பதை உங்களால் நம்ப முடிகிறதா? குழந்தைகளுக்கு அவர்களின் ஆரம்ப வகுப்புகளிலேயே பிற மதங்களின் கலாச்சாரமும் வணக்க முறைகளும் சொல்லி கொடுக்கப்படுகின்றன. இதனால் இஸ்லாத்தை மறந்த நிலையிலேயே குழந்தைகள் வளர்கின்றனர்.

## 6. தகுதிக்கேற்ற வேலை:

எவ்வளவுதான் மேற்படிப்புகளை நாம் படித்திருந்தாலும் வெளிநாடுகளில் இருக்கும்; காலம் முழுவதும் ஒரு அடிமையின் வாழ்க்கையாகத்தான் நாம் வாழ வேண்டும். நமது கல்வி மேற்படிப்புகள் மற்றும் நமது வேலையின் அனுபவங்கள் அனைத்தையும் இங்குள்ள (குறிப்பாக வளைகுடா நாடுகளில்) ஸ்பான்சர்களிடம் தான் நாம் அடகு வைக்க வேண்டும். வெளிநாட்டிற்கு வந்தால்தான் எனது வேலையில் முன்னேற்றம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் வந்த பலரின் நிலை இன்று இதுதான்.

இது ஒருபுறம் என்றால் மறுபுறம் வெளிநாட்டில் வாழும் பலருக்கு அலுவலகங்களில் வேலையே கிடையாது. வெளிநாடுகளில் வாழ்பவர்களிடமிருந்து அதிகமான மின்னஞ்சல்கள் வருவதற்கும், தேவையற்ற விஷயங்களில் அவர்கள் சர்ச்சை செய்து கொண்டிருப்பதற்கும், அடுத்தவர்களை குறித்த அவதூறுகளையும் புறத்தையும் பரப்புவதற்கும் இதுதான் காரணம். (இவர்கள் குறைந்த எண்ணிக்கையினர் என்பதை மனதில் கொள்ளவும்).

நமது திறமைகளை மழுங்கடித்து, அறிவுத்திறனை குறைத்து, நம்மை ஒரு முழு சோம்பேறியாக மாற்றும் பணியை வெளிநாடுகள் திறம்பட செய்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாகத்தான் வெளிநாட்டில் வாழ்பவர்கள் இந்தியாவில் வேலை செய்வதற்கு சிரமப்பட்டு மீண்டும் வெளிநாடுகளுக்கே திரும்பும் காட்சியை நாம் காண்கிறோம்.

## 7. மீண்டும் தாயகம்:

வெளிநாடுகளுக்கு வந்த பிறகு மீண்டும் தாயகத்திற்கு செல்வது என்பது பெரும்பாலும் இயலாத காரியமாகவே இருக்கிறது. சில வருடங்களில் திரும்பி விடுவோம் என

சபதம் ஏற்று வந்தவர்கள் பல வருடங்கள் ஆகியும் திரும்பிச் செல்லாத நிலைதான் உள்ளது. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். நிவர்த்தி செய்ய முடியாத குடும்ப பாரம் ஒருபுறம் என்றால் இனி எப்படி ஊருக்கு சென்று வாழ்வது என்ற கேள்வி மறுபுறம் எழுகிறது.

அடுத்த வருடம் எப்படியும் சென்று விடலாம் என நமக்கு நாமே சமாதானத்தை சொல்லிக் கொண்டு ஒவ்வொரு வருடத்தையும் கழித்துக் கொண்டிருக்கிறோம். குழந்தைகளுடன் தான் நாட்களை செலவழிக்க முடியவில்லை பேரக்குழந்தைகள் உடனாவது நேரத்தை கழிப்போம் என வெளிநாட்டு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து செல்லும் போது குடும்பத்தினர் இவர்களை ஒரு பாரமாகவே கருதுகின்றனர்.

### 9. மரணத்தின் விளிம்பில்:

வெளிநாடுகளில் வேலை செய்யும் பெரும்பாலான மக்களின் பணிகளை நாம் நோக்கும் போது நமது உள்ளம் பதைக்கிறது. உயர்ந்த கட்டடங்களில் கண்ணாடிகளை பொருத்துவது, அவற்றை சுத்தம் செய்வது, கொளுத்தும் வெயிலில் கேபில்களை இழுத்துச் செல்வது, எடை அதிகமான கட்டிட பீம்களை கிரேன்கள் மூலம் வைப்பது... என அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இன்னும் சிலரின் வேலைகளையும் அவர்களின் தங்குமிடங்களின் நிலையையும் நம்மால் இங்கு விவரிக்க முடியாது. வேலையின் போது ஏற்படும் உயிரிழப்புகளை நாம் இங்கு அதிகமான அளவில் கண்டு வருகிறோம். தனது கணவனும் மகனும் செய்யும் வேலைகளை பெண்கள் நேரில் கண்டால் நிச்சயம் அவர்களை மீண்டும் வெளிநாடுகளுக்கு அனுப்ப மாட்டார்கள்.

கவர்ச்சியாக காட்டப்படும் வெளிநாட்டு வாழ்க்கையின் சாதகங்களையும் பாதகங்களையும் இந்த கட்டுரையில் நாம் கூறியுள்ளோம். நாம் முன்னர் கூறியது போல் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தும் அனைவருக்கும் பொருந்த வேண்டும் என்று எவ்வித விதியும் கிடையாது. நமது வாழ்க்கை சூழ்நிலையை கருத்தில் கொண்டு நாம் வேலை செய்யும் இடத்தை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.

# பெண்மணி அவள் கண்மணி

*- சிபாயா சமான்*

இறைவன் படைத்த அற்புதமான படைப்புகளில் ஒன்றுதான் மனித படைப்பு. அதிலும் பெண்கள் பலவீனமானவர்களாக இருந்தாலும் அவர்களிடம் நற்பண்புகளும், நன்நடத்தைகளும் இருப்பது சிப்பியோடு முத்து ஒட்டி இருப்பதுபோன்றாகும். இருப்பினும் பெரும்பாலான பெண்கள் அவற்றை வெளிக்கொண்டு வராமல் தனக்குள்ளே புதைத்து வைத்திருக்கின்றனர். இதற்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை இந்த வகையில், தான் வாழ்கின்ற சுற்றுச்சூழல் இஸ்லாத்தைப் பற்றிய பூரண விளக்கமின்மை, சமுதாயத்தின் மத்தியில் ஏற்படும் ஒருவிதமான பயம் கலந்த வெட்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளில் ஒன்றுதான் கண். (அல்ஹம்துலில்லாஹ்) இது ஒரு மனிதனின் உடம்பில் எவ்வளவு முக்கியமான பகுதியோ அதுபோலத்தான் ஒரு குடும்பத்தில் பெண்ணின் நிலையும் உள்ளது.

இவ்வுலகம் முழுவதும் செல்வமாகும் அவற்றில் மிகச்சிறந்தது நல்லொழுக்கமுள்ள பெண்ணாவாள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்). செல்வத்துள் செல்வம் ஒழுக்க மாண்புடையவளே என முழங்குகிறது இந்த நபிமொழி.

பெண்களைப் பொறுத்தவரை தங்களை அறியாமலே ஒரு சில தவறுகளை செய்கிறார்கள். ஆனால் மார்க்க உபதேசங்களை கேட்கும்போது தன்னைத் திருத்திக்கொள்பவர்களும் உண்டு. அதிலும் ஒரு சிலர் ஒரு சில நாட்களுக்கு பின் பழைய நிலைக்கே திரும்பிவிடுகின்றனர். இதுதான் வேதனைக்குறிய விஷயமாகும்

இதற்கு என்ன காரணம்? கூடுதலான விழிப்புணர்வு இல்லை. தானும் தனது வேலையும் என்று இருக்காமல் எமது மார்க்க அறிவைக் கூட்டிக்கொள்ள முயல வேண்டும். வானம் முட்டாமல் போய்க்கொண்டிருப்பதைப்போல படிப்பதற்கு எல்லையே இல்லை. எனவே ஒவ்வொரு நாளும் ஒரு சிறுபகுதி நேரத்தை ஒதுக்கி நல்ல விஷயங்களைத்தேடி படிக்க முயல்வதுடன் அதை நடைமுறையிலும் கொண்டுவர முன்வரவேண்டும். இல்லையேல் இந்த உலகில் வாழ்வதில் அர்த்தமே இல்லை.

நாம் செய்யும் தவறில் மிக முக்கியமானது ஒருவர் இல்லாத நேரத்தில் அவரது குறைகளை பேசுவதும், அவர்களைக் கேவலப்படுத்துவதும் பழக்கமாகி விட்டது. இதுபற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் வன்மையாக கண்டிக்கிறான்.

**முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறியதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம் (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்;**

**இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள்; ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும்; எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள். (அல்குர்அன் 49: 11)**

மேலும் ஒரு கூட்டம் இருக்கிறது திருந்தி வருபவர்களைக்கூட அவர்களது பாதையில் ஒழுங்காக செயல்பட விடுவதில்லை. அதையும் இதையும் பேசுவது. குறிப்பாக ஒரு பெண் தன்னுடைய பர்தா விஷயத்தில் தன்னை சரிசெய்து கொண்டால் கூட அதற்கும் ஏளனமாக பேசுவது முதலில் இவ எப்படி இருந்தா இப்ப பெரிதாக பர்தா எல்லாம் போட்டுக்கிட்டு வந்திருக்கா இவளைப்பத்தி எங்களுக்கு தெரியாதா? என்று இந்த மாதிரி எல்லாம் எடுத்தெறிந்து பேசுவது.

இப்படிப்பட்டவர்கள் முதலில் தங்களைத் திருத்திக்கொள்ளவேண்டும், இதுபற்றி அல்லாஹ் தனது

அருள்மறையாம் திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

**எந்த ஒரு சமுதாயத்தவரும், தம் நிலையயைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை.. (அல்குர்ஆன் 13: 11)** எனவே நாம் கட்டுப்பாடின்றி பேச்சை விட்டுவிடக்கூடாது.

எதை பேசினாலும் சிந்தித்து பேசவேண்டும். நரகத்திற்கு கொண்டு செல்லும் சொற்களை தன் நாவால் மொழிந்து விடக்கூடாது.

தன் வெட்கத்தலத்தையும், நாவையும் பாதுகாத்துக் கொள்வதாக ஒருவர் பொறுப்பேற்றுக் கொண்டால் அவருக்கு சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்வேன் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளதை அடிக்கடி நாம் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும்.

கூடுதலான பெண்கள் தங்களை அறியாமலேயே நறுமணம் பூசிக்கொண்டு வெளியே சுற்றித்திரிவது, இதன் விபரீதம் அவர்களுக்கு தெரிவதில்லை ஒரு பெண் நறுமணம் பூசிக்கொண்டு அதன் வாடையை மக்கள் நுகர வேண்டும் என்பதற்காக அவர்களைக் கடந்து சென்றால் அவள் இப்படிப்பட்டவள் (விபச்சாரியாவாள்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(அஹ்மது)

மேலும் எந்தப்பெண்; நறுமனம் பூசிக்கொண்டு பிறர் அந்த வாடையை நுகர வேண்டும் என்பதற்காக பள்ளிக்குச் செல்கிறாளோ அவள் கடமையான குளிப்பைப்போன்று குளிக்காதவரை அவளுடைய தொழுகை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (அஹ்மது)

எனவே நீங்கள் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் கவனக்குறைவாக இருந்துவிடாமல் பெண்கள் பயன்படுத்தும் வாசனைப் பொருட்களைத் தேர்வு செய்யும் போது அது மணம் உள்ளடங்கியதாகவும் நிறம் எடுப்பாகவும் உள்ளதா என்பதை பார்த்து வாங்க வேண்டும்.

இன்று பலர் ஐவேளை தொழுகையில் கூட கவனம் செலுத்துவதில்லை. நீங்கள் இன்றைய பொழுதை எப்படி கடத்தினீர்கள் என்று கேட்டால் காலையில் எழுந்து பிள்ளைகளை ஸ்கூல் அனுப்புவதிலேயே போதுமென்று ஆகிபோச்சு அப்படியே பிள்ளைகள் பத்தி பதறி வருவார்களே என்று அடுத்த வேலை சமையலில் ஆரம்பித்து ஒருவாறு லுஹரைத் தொழுதாச்சு அத்தோடு சாப்பிட்டுவிட்டு அப்படியே தூங்கி எழுந்துப்பார்த்தால் மஃரிப் நேரம் வந்து கொண்டிருக்கிறதே என்று சொல்லிவிட்டு அப்படியே அஸர் தொழுது முடிய மஃரிப் பாங்கும் சொல்ல அதையும் சேர்த்து தொழுதாச்சு இப்படியே தங்கள் தொழுகையில் ஒரு உப்புசப்பு இல்லாதமாதிரி செயல்படுகிறார்கள்.

அத்துடன் பெரிய காதுப்பூ, மோதிரம், காப்பு இவைகளை அணிந்து கொண்டே ஒழு செய்வது இப்படி செய்யும்போது அந்த இடங்களில் தண்ணீர் ஒழுங்காக படுவதில்லை இதனால் ஒழு சரியாக நிறைவேறாது. இப்படி அணிந்திருப்பவர்கள் ஒழு செய்யும்போது அவைகளை அசைத்து அந்த இடங்களில் தண்ணீர் படுமளவற்கு ஒழு செய்ய வேண்டும். இதை யாரும் கவனிப்பதில்லை. எனவே இது விஷயத்தில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவே இப்படியான சிறிய சிறிய தவறுகளை அடிக்கிக்கொண்டே போகலாம்.

இதுபோல தெரியாத விஷயங்களை கேட்டுத் தெரிந்துகொள்ள எவ்வளவோ வாய்ப்பு வசதிகள் இருந்தும் கூட அதைக்கேட்பதற்கு வெட்கப்படுகிறார்கள். இதுவும் பெரும் தவறுதான் இப்படிக் கேட்டால் ஏதும் நினைப்பார்களா, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றெல்லாம் யோசிப்பது ஆனால் ஸஹாபாப்பெண்கள் எப்படியான கேள்விகளெல்லாம் நபி(ஸல்) அவர்களிடத்தில் கேட்டுத் தெரிந்துக் கொண்டார்கள் என்பது நாமறிந்த விஷயமே எனவே இது விஷயத்தில் வெட்கப்படாமல் தயங்காமல் நமது மார்க்க விஷத்தில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

காலமும், கடலலையும் எவருக்காகவும் காத்திருக்காது. நாம்தான் வெற்றிப்பாதையை நோக்கி நமது அனைத்து செயல்களையும் திருத்திக் கொள்ளவேண்டும். மனிதன் தவறுக்கும் மறதிக்கும் மத்தியில்தான் படைக்கப்பட்டிருக்கிறான். எனவே நம்மை இறைவன் மன்னிக்கக்கூடியவன் என்ற உறுதியான நம்பிக்கையுடனும், முழுமையான ஈமானுடனும் வாழ்ந்தால் ஒவ்வொரு பெண்ணும் அவ்வீட்டின் கண்மணி மட்டுமின்றி சுவர்க்கத்தின் கண்ணிகளாகவும் பூத்துக் குலுங்கலாம் இன்ஷா அல்லாஹ்.

## இந்திய கடற்படையில் பணியாற்ற தகுதி உள்ளோர் விண்ணப்பிக்கலாம்

1. இந்திய கடற்படையில் ஆர்ட்டிபைசர் அப்ரண்டீஸ் பணிக்கு கல்வித் தகுதியாக 10, பிளஸ்-2 கணிதம் மற்றும் பவுதீகத்தை பாடமாகக் கொண்டு 55 சதவிகிதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேலும், வேதியியல், உயிரியல் மற்றும் கணினி அறிவியல் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரின் வயது வரம்பு: 1, ஆகஸ்ட் 1991க்கும், 31, ஜூலை 1994க்கும் இடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

2. இந்திய கடற்படையில் மெட்ரிக்ரெக்ரூட் பணிக்கு மெட்ரிக் (10ம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரின் வயது வரம்பு: 1, அக்டோபர் 1990க்கும், 30, செப்டம்பர் 1994க்கும் இடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

3. இந்திய கடற்படையில், மெட்ரிக் வரை பயிலாதோர் பணியிடங்களுக்கு 6-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரின் வயது வரம்பு: 1, அக்டோபர் 1990க்கும், 30, செப்டம்பர் 1994க்கும் இடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள். 15, ஜனவரி 2011 ஆகும்.

மேற்கண்ட பணிகளுக்கான தேர்வு 2011ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் சென்னை, கோயம்புத்தூர், அரக்கோணம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நடைபெறும்.

இந்திய கடற்படையில் ஆட்கள் சேர்வதற்குரிய முறையான விண்ணப்பங்கள் மற்றும் இதர விபரங்களை கீழ்காணும் வெப்சைட்டில் தெரிந்து கொள்ளலாம்.

www.nausena-bharti.nic.in

Source: www.maalaimalar.com/2010/12/19173036/call-from-indian-navy.html

குறிப்பு: சமுதாய சொந்தங்கள் அனைத்து விதமான அரசாங்க துறைகளில் சிறந்து விளங்க ஆக குறைந்தளவு கல்வி தகுதி கொண்ட இந்த பணியிடங்களுக்கு தகுதியுள்ளவர்கள் அனைவரும் விண்ணப்பித்து அரசாங்க வேலை வாய்ப்புகளை பெற்று எதிர்கால வாழ்க்கையை சீரும் சிறப்பாக்கிக் கொள்ள வேண்டுகிறோம்.

*நான் படித்த அறிவிப்பு…- முதல் பக்கத் தொடர்ச்சி …*

எச்சரித்திருக்கின்றது.

### 7. லண்டன்

புகைத்தலை எதிர்த்து ஆஸ்திரேலிய நூறு மில்லியன் பவுண்ட் செலவழித்திருக்கின்றது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் லண்டனின் சுகாதார அமைச்சர் தானாக முன்வந்து கலந்து மக்களுக்கு புகைத்தலை எச்சரிக்கை செய்கின்றார்.

### 8. சுவிடன்

சுவிடன், தனது நாட்டை இருபது ஆண்டிற்கு பிறகு புகைத்தலில்லாத நாடாக ஆக்குவதற்காக ஒரு பாரிய திடமான திட்டத்தை வகுத்துள்ளது.

### 9. துருக்கி

துருக்கி புகைத்தலை தடை செய்யும் நாடுகளோடு தன்னையும் சேர்த்துக் கொண்டது. குறிப்பிட்ட இடங்களில் மட்டுமல்ல, உணவருந்தும் இடங்கள் விளையாட்டரங்குகள் அரசு பொது இடங்கள் போன்ற பொது இடங்களிலும் அதை தடுத்துள்ளது. இதை கண்காணிப்பதற்காக நாலாயிரம் பேரை நியமித்துள்ளது. புகைத்தலைப்பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு நகரங்களிலும் (சிட்டியிலும்) கூடிய கவனத்தோடு தொலைபேசிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இதற்காக பொது மக்களின் ஒத்துழைப்பு கிட்டதட்ட 90 முதல் 95 சதவீதம் வரை கிடைத்துள்ளது.

### 10. பெல்ஜீகா

புகைத்தலிலிருந்து மக்களை தடுப்பதற்காக அதன் பெட்டிகளில் அதை உபயோகப்படுத்துபவர்களுக்கு ஏற்படும் ஆபத்தான நோய்களுள்ள புகை படங்களை அச்சிடும்படி பெல்ஜீகா நாடு புகைத்தலை தயாரிப்பு செய்யும் நிறுவனங்களுக்கு கட்டாயப்படுத்தியிருக்கின்றது.

### 11. ஹாங்காங்

ஹாங்காங்கில் புகைப்பவர்களை நீதிமன்றங்களுக்கு எடுத்து செல்லப்படும் குற்றவாளிகளாக கருதப்படுவார்கள். இதுவரை (220) வழக்குகளை விட அதிகமான வழக்குகள் இந்த விவகாரத்தில் பதியப்பட்டிருக்கின்றது. யார் புகைத்தலில் ஈடுபடுகின்றார்களோ அவர்களுக்கு 5000 டாலர் அபராதமாக வசூலிக்கப்படும் என அந்த நாடு சட்டம் இயற்றியுள்ளது.

### 12. அமெரிக்கா

புகைத்தலினால் ஏற்படும் நோய்காரர்களுக்கு மருத்துவ செலவிற்காக அதை செய்யும் நிறுவனங்கள் வருடத்திற்கு 246 பில்லியன் டாலரை தரவேண்டுமென்று அமெரிக்க நிதி அமைச்சு புகைத்தலை செய்யும் நிறுவனங்களுக்கு எதிராக கோர்டில் வழக்கு தொடர்ந்ததை அந்த நிறுவனங்கள் ஏற்றிருக்கின்றது.

### 13. ஸ்பெய்ன்

ஸ்பெய்ன், புகைத்தலுக்கு எதிராக செய்த விழிப்புணர்வு போராட்டத்தால் ஐந்து இலட்சம் ஸ்பெய்ன் நாட்டவர்கள் புகைத்தலை விட்டிருக்கின்றார்கள். இதையும் மீறி புகைப்பவர்களுக்கு அந்த நாட்டு துணை பிரதமர் கடுமையான அதிகபட்ச அபராதத்தை தண்டனையாக எச்சரித்துள்ளார். அதிகபட்சமாக அது பத்து இலட்சம் யூரோவாக உயரலாம் எனவும் எச்சரித்துள்ளார்.

அன்புள்ள வாசகர்களே! எச்சரிக்கைகளை படித்தீர்களா? நாகரீகத்தில் முத்தியதாக??? சொல்லப்பட்ட நாடுகளே இந்த எச்சரிக்கைகளை விடுத்திருக்கும் போது நாம் ஏன் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கக்கூடாது. புகைத்தல் விஷயத்தில் மிகக் கவனமாக இருங்கள். அது மனிதனையே கொன்று விடும் பணத்தை கொல்வதற்கு முன்.

மேற் கூறப்பட்ட எச்சரிக்கைகள் படைப்புகள் இட்ட எச்சரிக்கைகளாகும், ஆனால் படைத்தவன் இட்ட எச்சரிக்கைகளையும் இங்கு குறிப்பிட நான் விரும்புகின்றேன்.

### புகைத்தல் இஸ்லாத்தில் ஹராமாகும்

புகைத்தல் இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட (ஹராமாக்கப்பட்ட) ஒன்றாகும் என்பதை முதலில் விளங்கிக்கொள்வது அவசியமாகும். இது பற்றி பலதரப்பட்ட கருத்துக்கள் கூறப்படுவதற்குரிய காரணம், நபி (ஸல்) அவர்கள் காலத்திலோ அதே போல் நபித்தோழர்கள் மற்றும் தாபியீன்கள் காலத்திலோ புகைத்தல் பழக்கம் மக்களிடத்தில் இருந்ததாக வரலாற்று குறிப்புகள் ஏதும் இல்லை. அதற்கு பின்புதான் இந்த கெட்ட பழக்கம் மக்களிடத்தில் உருவானது. குர்ஆனிலும் ஹதீதிலும் புகைத்தல் என்று குறிப்பிட்டு எந்த ஒரு ஆயத்தும் ஹதீதும் வரவில்லை. அதேபோன்று புகைத்தல் பற்றிய தெளிவான அறிவு இல்லாததுமே இந்த கருத்து முரண்பாட்டிற்கு முக்கிய காரணம் என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். இஸ்லாத்தில் புகைத்தல் தடுக்கப்பட்ட ஒன்றாகும் என்று கூறும் போது ஒரு குர்ஆன் வசனத்திலோ அல்லது ஒரு ஹதீதிலோ புகைத்தல் ஹராம் என்று வந்திருப்பதாக உங்களால் காட்ட முடியுமா? என்று சிலர் கேட்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

இப்படிப்பட்ட மக்கள் ஒரு பொது விதியை விளங்கிக் கொள்வது அவசியமாகும். ஒன்றை அது ஹராமா அல்லது ஹலாலா என்பதற்கு குர்ஆனிலோ ஹதீதிலோ தெளிவான ஆதாராம் இல்லாத விஷயத்தில் ஒரு பொது விதி இருக்கின்றது. அதாவது, தனக்கு இடர் விளைவிக்கக்கூடிய அல்லது பிறருக்கு நோவினை தரக்கூடிய அல்லது பணத்தை நாசமாக்கக்கூடியவைகள் அனைத்தும் ஹராம் என்பது ஒரு பொது விதியாகும் என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். இதே போல் இன்னும் ஒரு விதியையும் தெரிந்து கொள்ளுங்கள், அதாவது, நபி(ஸல்) அவர்களின் காலத்திற்கு பின் ஏற்பட்ட அல்லது இனிமேல் ஏற்படக்கூடிய புதிய சவால்களுக்கும் குர்ஆனிலும் ஹதீதிலும் விடை கிடைப்பதே அவ்விரண்டிலுள்ள சிறப்புக்களில் ஒன்றாகும். அதாவது, குர்ஆனில் ஒரு வசனம் குறிப்பிட்ட விஷயத்திற்காக இறங்கினாலும் அந்த கருத்தில் இனி வருங்காலத்தில் வரக்கூடிய அனைத்து பிரச்சினைகளுக்கும் அந்த ஆயத்துத்தான் விடையாக இருக்கும். ஹதீதும் இவ்வாறுதான்.

இதையும் கவனத்தில் வைத்துக் கொண்டு பின்வரும் குர்ஆன் வசனங்களையும் ஹதீதுகளையும் பார்க்கும் போது பல ஆயத்துகளும் ஹதீதுகளும் புகைத்தல் பற்றியும் அதனால் தனக்கும் பிறருக்கும் நமது பொருளாதாரத்திற்கும் ஏற்படும் நஷ்டங்கள் பற்றியும் கூறுவதை அறிந்து கொள்ளும் போது உண்மைகள் என்ன என்பது புரிய வரும் இன்ஷா அல்லாஹ்.

*இன்ஷாஅல்லாஹ் தொடரும்*

# நான், எனக்காக (பாகம் - 2)

- ஹாஜா முஹ்யுத்தீன்.

தனது பொருளாதாரத்தை மார்க்கம் உன்னுடையது இல்லை என்று அறுதியிட்டு, உறுதியிட்டு ஏன் கூறுகின்றது என்று பார்த்தால் அங்கே ஒரு பயங்கரமான நிகழ்வு ஒழிந்து கொண்டிருக்கிறது இந்த பயங்கரமான நிகழ்வு எப்பொழுது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும், எந்த சூழ்நிலையிலும் நம்மை வந்தடையக்கூடியது என்று எல்லோரும் அறிந்து வைத்திருக்கின்றனர்.

என்றாலும் உலகத்தை அடைய வேண்டும் என்ற பேராவலினாலும், மாபெரும் சூழ்ச்சிக்காரன் மற்றும் பொய்யனான ஷைத்தானின் உந்துதலின் காரணத்தாலும் மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம், அதுதான் எதிர்பார்க்கப்பட்ட மரணமாகும்.

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும்; (அல்குர்ஆன் 3: 185)

ஆம், மரணம் ஏற்பட்ட பின்பு வருத்தப்பட்டு, கைசேதப்பட்டு என்ன பயன், வரும்முன் காக்க வேண்டுமல்லவா? மரணம் எந்த நேரத்திலும் வரும் என்று தெரிந்திருந்தும் இந்த உலக வாழ்வானது மறுமைக்கு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை மறக்கடித்து விட்டதே.

அச்சமுட்டி எச்சரிக்கை செய்யக்கூடிய எத்தனையோ அல்குர்ஆன் வசனங்களை படித்தோம், ஹதீதுகளை படித்தோம், சொற்பொழிவுகளை கேட்டோம், பார்த்தோம், எச்சரிக்கை செய்யக்கூடியவர்கள் மறைமுகமாகவோ, நேரடியாகவோ நம்மிடம் வந்து சொன்னார்களே அவற்றிற்கு என்ன பதில் அளித்தோம் உண்மையென்று உணர்ந்தும் மனஇச்சைக்கு கட்டுப்பட்டு வாழ்ந்துவிட்டோமே, கைதேசமே, நஷ்டமே, என்று மரணமானது தொண்டைக்குழியை அடைந்தபிறகு புலம்பி என்ன பயன்.

நாம் ஒவ்வொருவருக்கும் நன்மை எது, தீமை எது என்று பிரித்தறிவிக்கக்கூடிய அறிவு பெற்றது முதல் (அதாவது நமக்கு கருத்து தெரிந்தது முதல்) நம்முடைய குடும்பத்தில் இரத்த-பந்த உறவினர்களில் எத்தனையோ பேர் மரணித்திருக்கிறார்கள், உறவினர்களில், அண்டைவீட்டார்களில், நண்பர்களில், அறிந்தவர்களில், அறியாதவர்களில் பலர் மரணித்திருக்கின்றார்கள்.

இது போன்ற மரண நிகழ்வுகளில் நாம் நேரடியாக கலந்து கொண்டிருக்கின்றோம் அல்லது பிறர் சொல்லி கேட்டிருக்கின்றோம். இவர்களில் யாராவது ஒருவர் தன்னுடைய செல்வத்திலிருந்து ஏதாவது ஒரு பொருளை எடுத்துச் சென்றுள்ளார்களா? அல்லது அவர்களால் எடுத்துச் செல்ல முடியவில்லையென்றாலும் அவருக்கு துணையாக யாராவது எடுத்து சென்றுள்ளார்களா? என்று நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். அதனால்தான் இஸ்லாம் கூறுகிறது உண்டு கழித்தது, உடுத்தி கிழித்தது, நல்லறம் புரிந்தது தவிர வேறு எதுவும் உன்னுடையது அல்ல, இதனையே பின்வரும் ஹதீது உறுதிபடுத்துகிறது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், மரணித்தவரை 1) அவரது குடும்பம், 2) அவரது செல்வம், 3) அவரின் அமல்கள் ஆகிய மூன்றும் பின் தொடரும், நல்லடக்கம் முடிந்தவுடன் அவைகளில் இரண்டு திரும்பி விடும், ஒன்று (அவருடன்) தங்கி விடும். அவர் குடும்பத்தாரும், அவரின் செல்வமும் திரும்பி விடும். அவரின் அமல்கள் மட்டும் (அவருடன் மண்ணறையில்) தங்கிவிடும், அறிவிப்பாளர்: அனஸ்(ரலி) அவர்கள் (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

இந்த ஆக்கத்தை படிக்கக்கூடிய ஒவ்வொருவரும் இன்றுமுதல் நாம் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். நான், எனக்காக என்ன சம்பாதித்து வைத்துள்ளேன், எனக்கு உதவியாக இருக்க, பரிந்துரை செய்ய, எனக்காக வாதாட, படு பயங்கரமான நரகத்திலிருந்து காப்பாற்றி உயர்ந்த உன்னதமான ஜன்னத்துல் பிர்தௌஸ் என்ற சுவர்த்தில் என்னை சேர்க்க, நான் சுவர்க்கத்தின் வாரிசாக மாற (நபி இப்றாஹிம் (அலை) அவர்கள் கேட்ட துஆ) நான் என்ன செய்ய வேண்டும் என்று எண்ண வேண்டும் அதற்குண்டான அனைத்து முயற்சிகளையும் தொடர வேண்டும் அத்தோடு அல்லாஹ்வின் மீது ஆதரவு வைத்து துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் சுவர்க்கம் நிச்சயம். அவைகள் என்ன?

1. அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ்வின் உதவியால் இஸ்லாம் என்ற உன்னதமான மார்க்கத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டோம், அடுத்தது நம் ஒவ்வொருவரின் மீதும் தொழுகை கடமையான ஒன்றாக இருக்கின்றது. இதுவே நான், எனக்காக சேர்க்கக்கூடிய மிகப் பெரிய செல்வம், ஒருபோதும் ஐந்து நேரத் தொழுகைகளை விடவே கூடாது, காரண காரியங்களை கூறி தொழாமல் இருக்கக்கூடாது.

வறுமையிலும்-செழுமையிலும், இளமையிலும்-முதுமையிலும், ஆரோக்கியத்திலும்-நோயிலும், மிதமான வெயிலிலும்-கடும்வெயிலிலும், மிதமான குளிரிலும்-கடுங்குளிரிலும், மிதமான மழையிலும்-கடும்மழையிலும் இன்னும் எல்லா நேரத்திலும், எவ்வாறு இந்த கால மாற்றங்கலெல்லாம் நான் இந்த உலகத்தை அடைய தடையாக இருக்காதோ அதே போன்று கடமையான எந்த தொழுகையும் என் மீது பாக்கியிருக்கக்கூடிய நிலையில் நான் மரணித்துவிடக்கூடாது. அதாவது, ஒரு நாளுடைய லுஹர் தொழுகை நேரம் முடிந்து அஸர் தொழுகையின் நேரம் ஆரம்பமாகிவிட்டது எனில் நான் லுஹரை தொழாமல் இருந்திருக்கக்கூடாது.

ஒரு மனிதரிடத்தில் நாளை மறுமையில் கேட்கப்படும் முதலாவது கேள்வி இத்தொழுகையை பற்றியே இருக்கும் என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள், தொழுகை முறையாக ஒருவரிடத்தில் அமைந்திருக்குமேயானல் மற்ற எல்லா அமல்களும் ஒழுங்காக இருக்கும் என இறைதூதர்(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த உலகத்தில் ஒரு வீடு கட்டுவதற்கு நாம் எத்தனை விதமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது நம்முடைய எத்தனை வருட உழைப்பு அதில் ஈடுபடுத்தப்படுகின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்கு அறிந்து வைத்துள்ளோம், ஒரு சிலரால் வாழ்நாள் முழுவதும் உழைத்தும்கூட தனக்கென்று ஒரு வீட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் மரணிக்கின்றவர்களும் இருக்கின்றார்கள் அல்லவா?

ஆனால் தினசரி ஒரு வீடு என்ற அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் நாளை மறுமையில் அல்லாஹ் வழங்க இருப்பதாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் அதற்கு என்ன உழைப்பை நாம் கொடுக்க

வேண்டும் என்று பார்த்தால், தினசரி ஐவேளை பர்ளான தொழுகைகளுக்கு இடையில் 12 ரக்அத்கள் சுன்னதுல் முஅக்தாவை நிறைவேற்றினால் இன்ஷா அல்லாஹ் ஒரு நாளைக்கு ஒரு வீடு நிச்சயம் நாளை மறுமையில், இதனை நான், எனக்காக செய்யக்கூடாதா?

2. நோன்பு - இவற்றில் கடமையான ரமளான் நோன்புகளை தவறாமல் நோற்பதுடன் முடிந்தளவிற்கு சுன்னத்தான நோன்புகளையும் நோற்று நாம் அதிகமான நன்மைகளை சேகரிக்க வேண்டும். குறிப்பாக, ரமளானை தொடர்ந்து வரக்கூடிய ஷவ்வால் மாதத்தில் 6 நோன்புகள், முஹர்ர மாதத்தில் ஆஷுரா நோன்புகள் 2, துல்ஹஜ் மாதத்தில் அரஃபா நோன்பு இவைகள் இல்லாமல் வாரந்தோறும் திங்கள் மற்றும் வியாழக்கிழமை நோன்புகள், மாதந்தோறும் பிறை 13, 14 மற்றும் 15-ல் பிடிக்கக்கூடிய நோன்புகள்

3. ஜக்காத் - தகுதியானவர்கள் மாத்திரம், வருடந்தோறும் கணக்கிட்டு கொடுத்து நாம் வைத்திருக்கக்கூடிய பொருளாதாரத்தை தூய்மையாக்கி கொள்ள வேண்டும்.

4. ஹஜ் - அல்லாஹ் யாருக்கு பொருள் வசதியும், உடல் ஆரோக்கியமும் கொடுத்திருக்கின்றானோ அவர்கள் மாத்திரம் தன்னுடைய ஆயுளில் ஒரு முறை ஹஜ் கடமையை நிறைவேற்றி மறுமைக்காக முற்படுத்தி கொள்ள வேண்டும்.

5. யாசிப்பவர், யாசிக்காதவர் என பாகுபாடுகளின்றி தன்னுடைய செல்வத்திலிருந்து தர்மமாக கொடுத்து நாளை மறுமைக்காக சேமித்து வைத்துக் கொள்வது. இவற்றில் பள்ளிவாசல்களுக்கு, மதரஸாக்களுக்கு, அநாதைகளுக்கு, வழிப்போக்கர்களுக்கு, கடுமையான நோயினால் கஷ்டப்படுகின்றவர்களுக்கு என எந்த வகையில் செலவு செய்தாலும் நான், எனக்காக செலவழித்ததே.

6. என்னுடைய வியாபாரம், கொடுக்கல்-வாங்கல், தொழில், வருவாயை ஈட்டித்தருக்கின்ற வேலை இவைகள் அனைத்தும் ஹலாலானதை கொண்டேயல்லாமால் வேறு எந்த வழிகளிலும் என்னுடைய பொருளாதாரம் எனக்கு கிடைக்க நான் அனுமதிக்க மாட்டேன். மேலும், நான் ஹராமான பொருளை ஈட்டுவதற்காக எந்தவிதமான முயற்சியும் செய்யமாட்டேன் என்கின்ற உறுதி என்னிடம் இருக்குமேயானால் என்னுடைய வருமானம் இன்ஷா அல்லாஹ் ஹலாலானதாகவே இருக்கும், இதில் எந்தவித ஹராமும் கலந்துவிட வாய்ப்பில்லை. இதனைக் கொண்டு நாளை மறுமையில் அல்லாஹ் கேட்கக்கூடிய கேள்விக்கு பதிலளிக்க இயலும் இன்ஷா அல்லாஹ்.

அதாவது நாளை மறுமையில் எவ்வாறு சம்பாதித்தாய், எவ்வாறு செலவழித்தாய் என்ற கேள்விக்கு பதிலளிக்காத வரையில் ஒருவருடைய பாதம் அதனைவிட்டு நகராது என்று கீழ்கண்ட ஹதீது விவரிக்கின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், அடியான் தன் ஆயுளை எவ்வாறு செலவழித்தான் என்றும், அவன் தன் கல்வியை எதில் செயல்படுத்தினான் என்றும், அவன் தன் செல்வத்தை எங்கிருந்து சம்பாதித்தான், எதில் செலவழித்தான் என்றும், அவன் தன் உடலை எதில் பயன்படுத்தினான் என்றும் அவனிடம் விசாரிக்கப்படாதவரை அவனின் இரு பாதங்களும் (மறுமை நாளில் அவன் நிற்கும் இடத்தைவிட்டு சிறிதளவும்) நகர முடியாது. அறிவிப்பாளர்: அபூபர்ஜா நழ்லா பின் உபைதில் அஸ்லமி(ரலி) ஆதாரம்: திர்மிதி

இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதாவது, விஞ்ஞானம் விண்ணை முட்டிவிட்ட இந்த காலத்தில் வாழக்கூடிய நம்மவர்களில் பலர் அதிலும் பாமரர் முதற்கொண்டு படித்த அறிவுஜீவிகள் வரை எடுத்து வைக்கக்கூடிய வாதம் என்னவெனில் இந்த விஞ்ஞான உலகத்தில் ஹலால், ஹராம் எல்லாம் பேணி நாம் வாழமுடியாது, நாம் ஏன் அதனை வட்டி என்று எடுத்துக் கொள்ள வேண்டும் அது சேவை வரியாக, வாடகையாக, அவர்களின் உழைப்பிற்குண்டான கூலியாக ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று புதுப்புது பெயர்களை சூட்டிக் கொண்டு இதனை நியாயப்படுத்துகின்றனர்

ஆனால் அல்லாஹ் கியாமத்நாள் வரை வரக்கூடிய அனைத்துலக மனித சமுதாயத்திற்கு வாழ்க்கை நெறியாக, வழிகாட்டியாக அனுப்பிய தன்னுடைய அருள்மறை திருக்குர்ஆனில் தெள்ளத்தெளிவாக குறிப்பிடுகின்றான். அதாவது,

**யார் வட்டி (வாங்கித்) தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய் எழ மாட்டார்கள்; இதற்குக் காரணம் அவர்கள், "நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே" என்று கூறியதினாலேயாம். அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான்;.**

**ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது - என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது. ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின் பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள். (அல்குர்ஆன் 2: 275)**

**அல்லாஹ் வட்டியை (அதில் எந்த பரக்கத்தும் இல்லாமல்) அழித்து விடுவான்;, இன்னும் தான தர்மங்களை (பரக்கத்துகளைக் கொண்டு) பெருகச் செய்வான்; (தன் கட்டளையை) நிராகரித்துக் கொண்டிருக்கும் பாவிகள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 2: 276)**

7. இறை தியானம் - நாம் அன்றாடம் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் இடையிடையே நமக்கு கிடைக்கக்கூடிய ஓய்வு நேரங்களில் திக்ர் செய்வதில் (இறைதியானங்களில்) ஈடுபட்டு மறுமைக்காக முற்படுத்திக் கொள்ள முடியும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், இரண்டு சொற்கள் உள்ளன அவை நாவின் மீது எளிதானவை, மீஜான் தராசில் கனமானவை, ரஹ்மானுக்கு மிகப் பிரியமானது (அவ்விரண்டு சொற்களாகிறது)

1. ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி 2. ஸுப்ஹானல்லாஹில் அழீம். அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

இன்னும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், அன்றாடம் நிகழக்கூடிய சிறிய பாவங்களுக்கு பரிகாரம் இஸ்திஃபார் என்ற பிழைபொறுப்புத் தேடுவது. இதன் மகிமையைபற்றி பின்வரும் ஹதீது கூறுகின்றது.

அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், யார் (இஸ்திஃபாரை) பிழை பொறுப்புத் தேடுவதை அவசியமாக்கிக் கொள்கிறாரோ, அவருக்கு எல்லா நெருக்கடிகளை விட்டும் ஈடேற்றத்தை அல்லாஹ் வழங்குவான். மேலும் எல்லாக் கவலைகளை

விட்டும், அவருக்கு நிம்மதியை வழங்குவான். எதிர்பாராத இடத்திலிருந்து அவருக்கு (ரிஜ்கை) இரணத்தை வழங்குவான். ஆதாரம்: அபூதாவூது

முன் பின் பாவங்கள் அனைத்தும் அல்லாஹ்வால் மன்னிக்கப்பட்ட நபி(ஸல்) அவர்களே ஒரு நாளைக்கு 100 தடவைகளுக்கும் அதிகமாக பாவமன்னிப்பு தேடியுள்ளார்கள் என்றால் நாம் எந்தளவு பாவமன்னிப்பு கேட்க வேண்டும் என்று சிந்திக்க கடமைபட்டுள்ளோம்.

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக ஒவ்வொரு நாளும் எழுபது தடவைகளுக்கும் அதிகமாக நான் அல்லாஹ்விடம் பிழை பொறுப்பு இறைஞ்சுகிறேன். மேலும் அவனளவில் தவ்பாச் செய்கிறேன். ஆதாரம்: புகாரி

நாங்கள் ஒரு மஜ்லிஸில் (அவையில்) நபி(ஸல்) அவர்கள் செய்த (இஸ்திஃபாரை) எண்ணிப் பார்க்கக் கூடியவர்களாக இருந்தோம். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள்,

ரப்பிஃபிர் லீ, வதுப் அலய்ய, இன்னக அன்தத் தவ்வாபுர் ரஹீம்

என் இரட்சகனே! என் பிழைகளைப் பொறுப்பாயாக! என் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக, நீ தவ்பாவை மிக ஏற்றுக் கொள்பவன். மிகக் கிருபையாளன் என நூறு முறை கூறுபவர்களாக இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்கள். ஆதாரம்: அபூதாவூது, திர்மிதி

8. அழைப்பு பணி - நபிமார்களுக்கு கொடுக்கப்பட்ட உன்னதமான அழைப்புப்பணியை முஹம்மது நபி(ஸல்) அவர்களை இறுதி தூதராக்கி, அவர்களின் உம்மத்தாகிய நம்மவர்களுக்கு இப்பணியை செய்ய வேண்டும் என்று அல்லாஹ் வலியுறுத்துகின்றான், அதனாலேயே நீங்கள் சிறந்த சமுதாயத்தினர் என்றும் கூறுகின்றான்.

மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்குறீர்கள்; (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்;. இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்;. (அல்குர்ஆன் 3: 110)

ஆக, ஒவ்வொரு முஸ்லிமின் மீது அழைப்புப்பணி பொறுப்பாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரின் பொறுப்புக்களை நிறைவேற்றியது பற்றி நாளை மறுமையில் வினவப்படுவீர்கள் என்ற ஹதீதும் அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்களின் அறிவிப்பின்படி புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பதிவாகியுள்ளது

9. வணக்கங்கள் மாத்திரமல்ல, ஒரு மனிதனின் வாழ்நாளில் அல்லாஹ்வும், முஹம்மது நபி(ஸல்) அவர்களும் தடுத்த ஒவ்வொன்றை விட்டும் தூர விலகி மறுமையின் தண்டனையிலிருந்து காத்துக் கொள்ள வேண்டும், அவற்றில்

பொய் சொல்லுதல், பொய் சத்தியம் செய்தல், புறம் பேசுதல், அவதூறு கூறல், கோள் சொல்லுதல், வாக்குறுதிக்கு மாறு செய்தல், நம்பினால் மோசடி செய்தல், கிடைக்கக்கூடிய செய்திகள் அனைத்தையும் உண்மை நிலை அறியாமல் மற்றவருக்கு பரப்புதல், மற்ற சகோதரருடைய கண்ணியம் பேணாமை நடத்தல், குத்தி காட்டி பேசுதல், பொருளாதாரத்தில் ஹலால்-ஹராம் பேணாமை, வட்டி கொடுத்தல், வாங்குதல், அதற்காக கணக்கு எழுதுதல், சாட்சியாக இருத்தல், பார்க்கக்கூடாததை பார்த்தல், கேட்கக்கூடாததை கேட்டல், பேசக்கூடாததை பேசுதல், பெருமை கொள்ளல்

மற்றும் பெற்றோரை பேணாமை, உறவினர்களை துண்டித்து வாழ்தல், பத்தினி பெண்கள் மீது வீண்பழி சுமத்தல், அனாதைகளின் சொத்துக்களை விழுங்குதல், மார்க்கறிஞர்களுக்கு கண்ணியம் கொடுக்காதது, பெரியவர்களுக்கு மரியாதை செய்யாமை, சிறியவர்களிடம் அன்பு பாராட்டாமை, தற்கொலை செய்தல் இவைகள் அல்லாமல் மார்க்கம் அனுமதிக்காத அனைத்து செயல்களைவிட்டும் ஒதுங்கி நான், எனக்காக வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

10. அல்லாஹ் மற்றும் அவனின் தூதர்(ஸல்) அவர்கள் ஏவியவைகளில் முடிந்தளவு நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது மற்றும் தடுத்தவைகளைவிட்டும் முற்றாக தடுத்துக் கொள்வது மட்டுமல்லாமல் இந்திய, இலங்கை பகுதிகளில் வணக்கம் என்ற போர்வையில் மூழ்கியுள்ள இணை வைத்தல், அனாச்சாரங்கள் (பித்அத்), மூடபழக்கவழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் அனைத்து செயல்களைவிட்டும் முற்றாக ஒழித்து வாழ வேண்டும்.

முடிவில்லாத, அழியாத, நீண்ட நெடிய மறுமை வாழ்க்கைக்காக வாழ மேலே குறிப்பிட்ட வணக்கங்கள் மாத்திரமல்லாது அல்லாஹ்வும் அவனின் தூதர்(ஸல்) அவர்கள் காட்டிதந்த வழிமுறைப்படி வாழ்க்கையை அமைத்து வாழ்ந்து உன்னத, உயர்ந்த ஜன்னத்துல் பிர்தௌஸ் என்ற சுவர்க்கத்தை அடைந்துகொள்ள எனக்கும் அனைவருக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக.

# கீப் சிட்டி கிளீன் அல்லது கீப் SR150

150 சவூதி ரியால் அபராதத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

வீதிகளில் பொது இடங்களில் வாகனத்தில் செல்லும் போது ஏதாவது பொருட்களை நாம் அருந்தும் தேனீர் மற்றும் குளிர்பானங்கள் போன்றவற்றை அருந்தியபின் அந்த பாட்டில்களை, தேனீர் குவளைகளை வெளியில் வீசினால் 150 சவூதி ரியால் அபராதம் என வீதிகளிலெல்லாம் விழிப்புணர்வு மற்றும் எச்சரிக்கை பலகைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றது. ஆகவே எந்தப் பொருளையும் வீதிகளில் வீசாமல் அதற்குரிய குப்பை தொட்டிகளில் போட்டு அபராதத்திலிருந்து உங்களை பாதுகாப்பதோடு நாட்டையும் நம்மையும் சுத்தமாக வைத்துக் கொள்ள பழகிக் கொள்வோமாக. 1400 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் இதை கூறிவிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சுத்தம் ஈமானின் பாதி, பாதையில் கிடக்கும் பொருளை அகற்றி விடுவது தர்மம் என்பது நபிமொழியாகும்.

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 7:5

## போட்டிக்குரிய கேள்விகள்

**1. உங்களுக்கு முன் சென்றவர்கள் அழிந்தது எல்லாம் இதனால்தான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்**

a. தொழுகையை விட்டதினால்

b. பித்அத் செய்ததினால்

c. வரம்பு மீறியதினால்

**2. முதன் முதலில் மறுமையில் விசாரணை இதைப் பற்றித்தான் இருக்கும்**

a. நோன்பு b. தொழுகை c. ஜகாத்

**3. சுவனவாயில்கள் எந்த கிழமைகளில் திறக்கப் படுகிறது?**

a. திங்கள் மற்றம் வியாழக்கிழமை

b. திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை

c. வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை

**4. நபி(ஸல்) அவர்களிடம், நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார் என்று கேட்டதற்கு முதலில் தாய் என்று எத்தனை முறை கூறினார்கள்?**

a. ஒன்று b. நான்கு c. மூன்று

**5. தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரத்தில் பானம் அருந்த இஸ்லாம் அனுமதிக்கின்றதா?**

a. அனுமதிக்கின்றது

b. அனுமதிக்கவில்லை

c. விரும்பினால் அருந்தலாம்

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 7:4 க்கான விடைகள்

1) b) அபூஹுரைரா(ரலி) அவர்கள்

2) c) முந்தைய வருடத்தின் பாவங்கள் மன்னிக்கப்படும்

3) a) கைபர்

4) b) சனிக்கிழமை

5) a) ஹிஜ்ரி 11

**அறிவுப் போட்டி - 7:4 க்கான பரிசு பெறுபவர் : K. Samsudeen**
**056 479 5104**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 45 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

யா அல்லாஹ்! நீ என்னுடைய ஞாபகத்தை உயர்த்துவதையும் என் பாவத்தை மன்னிப்பதையும் என் காரியத்தை சீர்படுத்துவதையும் என் உள்ளத்தை தூய்மைப்படுத்துவதையும் என் அபத்தை (கற்பை) பத்தினித்தனமாக்குவதையும் என்னுடைய உள்ளத்தை இலங்கச் செய்வதையும் என்னுடைய பாவங்களை மன்னிப்பதையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன். (யா அல்லாஹ்!) இன்னும் சுவர்க்கத்தின் உயர்ந்த அந்தஸ்துக்களையும் நான் உன்னிடம் கேட்கின்றேன். (ஹாகிம்)

யா அல்லாஹ்! என் ஆத்மாவிலும், என் கேள்விப்புலனிலும், என் பார்வையிலும், என் உயிரிலும், என் உடலமைப்பிலும், என் குணத்திலும், என் குடும்பத்திலும், என் உயிர்வாழ்விலும், என்னுடைய மரணத்திலும், என்னுடைய அமல்களிலும், நீ அருள்புரியும்படி நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். ஆகவே, என்னுடைய நற்காரியங்களை நீ ஏற்றுக் கொள்வாயாக! (யா அல்லாஹ்!) சுவர்க்கத்தின் உயர்ந்த அந்தஸ்துக்களையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். (ஹாகிம்)